அனகாபுத்தூர் நகராட்சி

<u>சென்னை – 600 070.</u>

<u>கூட்ட எண்.41/2019</u> <u>நாள். 07.03.2019</u>

## <u>தனி அலுவலர் அவர்களின் மார்ச் 2019 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்</u>

07.03.2019ம் நாள் வியாழன்கிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

<u>பொருள் எண். 1</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் மார்ச் 2019 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

<u>பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்</u>

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | மார்ச் 2019 | 0 | 0 | 0 | 0 | இல்லை | இல்லை |

<u>பொருள் எண். 2</u>

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் மார்ச் 2019 மாதத்தின் நாட் குறிப்புகள்

<u>அலுவலக குறிப்பு :</u> கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

<u>பொருள் எண். 3</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கல்மடுவு பகுதியில் உள்ள உரக்கிடங்கில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை Bio-Mining முறையில் அப்புறப்படுத்திட தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தனியார் நிறுவனம் மூலம் தயார் செய்யப்பட்டு பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி திட்ட அறிக்கையினை அண்ணா பல்கலை கழகத்தால் ஆய்வு செய்து மீள சமர்ப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டவாறும், பணிக்கான பட்டியல் தொகை வழங்க ஒவ்வொரு முறையும் அண்ணா பல்கலைகழகத்தின் கடிதம் பெற்று தொகை வழங்க தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து இவ்வலுவலக ந.க.எண்.656/2015/இ1 நாள்.07.02.2019ன்படி மேற்கண்ட பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும், அதற்கான ஆய்வு கட்டணத்தொகை நகராட்சி மூலம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டதின் பேரில், அண்ணா பல்கலைக்கழகத்தின் கடிதம் எண்.CES/DIR/ Anakaputhur

Municipality/2018-19 நாள்.22.02.2019–ன் படி ரூ.4,95,600/–(ரூ,4,20,000 + ரூ.75,600 ஜி.எஸ்டி)ஐ செலுத்த கோரி வரப்பெற்றுள்ள கடிதத்தை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.
மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 4**

அனகாபுத்தூர் நகராட்சிக்குட்பபட்ட வார்டு எண். 5ல் பாலாஜி நகர் 9வது தெரு கதவு எண்.1ல் குடியிருப்பில் வசிக்கும் திரு.எம்.கே.சத்தியமூர்த்தி அவர்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு பயன்படுத்தி வந்தனர். அதற்கான குடிநீர் இணைப்பு எண்.858 ஆகும். இந்நிலையில் மேற்கண்ட இடத்தினை அடுக்குமாடி குடியிருப்பாக மாற்றி மேற்கண்ட குடியிருப்பில் 8 வீட்டிணைப்புகள் பெற்று தொடர்ந்து பயன்படுத்தியும், அதற்கான பயன்பாட்டு தொகையினை எந்தவித நிலுவையுமின்றி செலுத்தி வருவதால் (இணைப்பு எண்.017/4931 முதல் 017/4938 வரை) பழைய இணைப்பு எண்.858–னை இரத்து செய்ய 01.03.19 தேதிய கடிதத்தில், தனக்கு குடிநீர் இணைப்பு வேண்டாம் என்று கோரியுள்ளார். இந்நகராட்சி குடிநீர் இணைப்பிற்கான துணை விதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண்.130,131,132,306(3) (சி) (டி) (இ) (எப்) (எச்) (ஐ) கீழ் உருவாக்கப்பட்ட விதிகளில் வரிசை எண்.(1)ல் உட்பிரிவு (இ)ன் படி குடிநீர் இணைப்பு வேண்டாம் என்று தெரிவிக்கும் பட்சத்தில் இரத்து செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குடிநீர் இணைப்பிற்கு மார்ச் 2019 வரை பயன்பாட்டு தொகையினை செலுத்தி எந்தவித நிலுவையும் இல்லை என தெரிவிக்கும் பட்சத்தில் மேற்படி இணைப்பு எண்.858ஐ கணிணி கேட்பில் இருந்து நீக்கம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்குறிப்பிட்ட குடிநீர் இணைப்பு எண்.858ஐ கணிணி கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.5**

05.03.2019ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி குடிநீர் வாகனம் டிஎன் 22 ஏஎல் 5349 பழுது பார்த்து பணி மேற்கொண்டு தகுதி சான்று பெறுதல் பணி | 1.50 | ராதாகிருஷ்ணன் ஆட்டோ ஒர்க்ஸ்<br>மகா சக்தி பாடி ஒர்க்ஸ் | குறைவு<br>அதிகம் |
| 2. | சமுதாய நலக்கூடத்தில் உணவு அருந்தும் அறைக்கு தேவையான மேசை மற்றும் நாற்காலி சப்ளை செய்தல் பணி | 6.00 | டி.கே.இண்டஸ்ட்ரியல்<br>வி.குணாளன் | 0.05 %குறைவு<br>1.25 %அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| **3.** | அனகாபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2,7 மற்றும் 13ல் 4 எண்ணம் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய சிறு மின் விசை மோட்டார் அமைத்தல் பணி | 10.00 | ஓசோன் டெக்னாலஜிஸ்<br>ஐ டெக் சுவிட் வாட்டர் டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் | 0.05 %குறைவு<br>1.25 %அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**

**<u>பொருள் எண்.6</u>**

2018 – **2019ம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும்** 2019 – **2020ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு ம**திப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் ஒப்தல் வழங்ஙகலாம்

**<u>பொருள் எண்.7</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டிட உரிமம், மனைப்பிரிவு ஒப்புதல் போன்றவற்றிற்கான கட்டணங்கள் நகர மன்ற தீர்மானம் எண். 218 நாள் 28.09.2017 ல் தீர்மாணிக்கப்பட்டுள்ளபடி. 01.11.2017 முதல் வசூல் செய்யப்பட்டு வருகிறது .

அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் .04.02.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி III பரிவு 1 (a) நாள் 04.02.2019 ன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்–2019 ல் ஆணை வெளியிடப்பட்டதின் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159/2018/டிபி3 நாள் 05.03.2019ல் உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்–2019ன் விதி எண்.14ல் கட்டிட அனுமதி காலம் ஐந்தாண்டுகள் மற்றும் ஒருமுறை கால நீட்டிப்பு காலம், மூன்று ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் கட்டிட அனுமதி கட்டணத்தை ஐந்தாண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும், கால நீட்டிப்பு காலத்தை மூன்று ஆண்டுகளுக்கு வழங்குவதற்கேற்பவும், மன்ற ஒப்புதலுடன் மாற்றி அமைத்து விதிகளின்படி, கட்டண விகிதங்களை பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி இந்நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 321 ( 2 ) மற்றும் 329 ன் கீழ் கீழ்கண்டுள்ளபடி திருத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணங்களை 01.04.2019 முதல் நடைமுறைப்படுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நகராட்சி சட்ட பிரிவு | தலைப்பு விவரம் | அளவு | குறிப்பு | தற்போது வசூலிக்கப் படும் கட்டணம் | குறிப்பு | உத்தேசி க்கப் பட்டுள்ள கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 5 | 8 |
| 1. | 175 | மனைப்பிரிவு / மனை உட்பிரிவு அனுமதி கட்டணம் | .... | .... | .... | .... | .... |
| | | a. 2 மனைகள் வரை | ஒருமுறை மட்டும் | ஒருமுறை மட்டும் | 1000 | ஒருமுறை மட்டும் | 1000 |
| | | b. 3 மனைகள் முதல் 8 மனைகள் வரை | ஒருமுறை மட்டும் | ஒருமுறை மட்டும் | 3000 | ஒருமுறை மட்டும் | 3000 |
| | | c. 10 மனைகள் மேல் 14 மனைகள் வரை (1 ஏக்கருக்குள்) | 1 ஏக்கருக்குள் | ஒருமுறை மட்டும் | 4000 | ஒருமுறை மட்டும் | 4000 |
| 2. | 176 | காலியிடத்தை தெருக்கள் அங்கீகாரம் செய்ய மேற்பார்வை கட்டணம் (Layout Fees) | 1 ஏக்கர் அதன் பாகத்திற்கு | ஒருமுறை மட்டும் | 5000 | ஒருமுறை மட்டும் | 5000 |
| 3. | 186 | தெருக்களில் போக்குவரத்து இடஞ்சல் இன்றி கட்டிட சாமான்கள் சேகரித்து வைக்க | 10. ச.மீ | | கட்டிட உரிமக் கட்டணத்தில் 40 % வசூல் செய்யப் படும் | | |
| 4. | 197<br>199 | குடிசை அல்லாத ஒரு கட்டிடத்தை கட்ட அல்லது புதுபித்து கட்ட கூடுதல் கட்டிடம் கட்ட அனுமதி அளித்தல். | | | | | |
| | | 1. குடியிருப்பு வீடும், ஓட்டுக் கூரை, தகரக்கூரை, சிமெண்ட் தகரக் கூரை (ம) லைட்ரூப் அமைக்க. | 10. ச.மீ அதன் பாகம். | மூன்று ஆண்டுகளுக்கு | 1300 | ஐந்தாண்டுகளுக்கு | 2200 |
| | | 2. குடியிருப்பு கட்டிடம் RCC மற்றும் தட்டோடு தரை தளம், இரண்டாம் தளம் மற்றும் பேஸ்மண்ட் புளோர் அமைக்க | 10. ச.மீ அதன் பாகம். | மூன்று ஆண்டுகளுக்கு | 1400 | ஐந்தாண்டுகளுக்கு | 2350 |
| | | 3. மூன்றாம் தளம் மற்றும் மேலும் | 10. ச.மீ அதன் பாகம். | மூன்று ஆண்டுகளுக்கு | 1500 | ஐந்தாண்டுகளுக்கு | 2500 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 4. குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்ட, தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம் (ம) பேஸ்மன்ட் புளோர் அமைக்க | 10. ச.மீ அதன் பாகம். | மூன்று ஆண்டுகளுக்கு | 2600 | ஐந்தாண்டுகளுக்கு | 4350 |
| | | 5. மூன்றாம் தளம் மற்றும் அதற்கு மேல் உள்ள தளங்களுக்கு | 10. ச.மீ | மூன்று ஆண்டுகளுக்கு | 3000 | ஐந்தாண்டுகளுக்கு | 5000 |
| | | 6. டாய்லட் கட்ட (குளியலறை (ம) கழிவறை | ஒன்றுக்கு | ..... | 800 | ஒன்றுக்கு | 800 |
| | | 7. குளியலறை கட்ட | ஒன்றுக்கு | ..... | 500 | ஒன்றுக்கு | 500 |
| | | 8.கழிவறை கட்ட | ஒன்றுக்கு | ..... | 500 | ஒன்றுக்கு | 500 |
| | | 9. செப்டிக் டேங்க் | ஒன்றுக்கு | ..... | 500 | ஒன்றுக்கு | 500 |
| | | 10. சுவர் (அ) வேலி முதலியவை அமைத்தல் 2.4 மீ உயரம் மேற்படாமல் | 1 அடி நீளத்திற்கு | ..... | 30 | 1 அடி நீளத்திற்கு | 30 |
| | | 11. கிணறு (அ) ஆழ்துளை கிணறு வெட்ட அனுமதி | ஒன்றுக்கு | ..... | 500 | ஒன்றுக்கு | 500 |
| | | 12. இட ஆய்வுக் கட்டணம். | ஒரு முறை மட்டும் | ..... | 1000 | ஒரு முறை மட்டும் | 1000 |
| | | 13. மனைப்பிரிவு வரைபட நகல், கட்டிட வரைப்பட நகல் வழங்க | ஒன்றுக்கு | ..... | 500 | ஒன்றுக்கு | 500 |
| | | 14. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (டீ.ழ.கூ) கட்ட | ஒன்றுக்கு | ..... | 400 | ஒன்றுக்கு | 400 |
| | | 15. மழைநீர் சேமிப்பு தொட்டி கட்ட | குடியிருப்பு ஒன்றுக்கு<br>..................<br>குடியிருப்பு அல்லாத கட்டிடம் | | 1500<br>........<br>2500 | குடியிருப்பு ஒன்றுக்கு<br>..................<br>குடியிருப்பு அல்லாத கட்டிடம் | 1500<br>........<br>2500 |
| | | **இதர கட்டணங்கள்** | | | | | |
| | | 16. கட்டிட அனுமதி விண்ணப்பம் | ஒன்றுக்கு | ..... | 10 | ..... | 10 |
| | | 17. நகர வரைபட நகல் வழங்க | ஒன்றுக்கு | ..... | 300 | ..... | 300 |
| | | 18. Professionals/ Developer பதிவு செய்ய | | | | | |
| | | a. பதிவு கட்டணம் | ஒருமுறை | ஒருமுறை | 0 | ஒருமுறை | 5000 |
| | | b. வைப்பு தொகை | ஒருமுறை | ஒருமுறை | 2500 | ஒருமுறை | 5000 |
| | | c. உரிமம் கட்டணம் | ஒருமுறை | ஒருமுறை | 1000 | ஒருமுறை | 2000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | d. உரிமம் புதுபித்தல் | ஒருமுறை | ஒவ்வொரு ஆண்டு மார்ச் 31ம் தேதிக்குள் கட்டணம் செலுத்த வேண்டும் தவறினால் 50ரூ கூடுதலாக உரிமம் புதுபித்த தொகையில் சேர்த்து செலுத்த வேண்டும். | 1000 | ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ம் தேதிக்குள் கட்டணம் செலுத்த தவறினால் 50ரூ கூடுதலாக உரிமம் புதுபித்தல் தொகையில் சேர்த்து செலுத்த வேண்டும். | 2000 |
| | | 19. அனுமதியின்றி கட்டிடப் பணி துவக்கப்பட்டிருப்பின் கட்டிட உரிமக் கட்டணத்துடன் கூடுதலாக 50% கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். | | | கட்டிட உரிமக் கட்டணத்துடன் கூடுதலாக 50% கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் | | |
| | | 20.கட்டிட இடிப்பு கட்டணம் | 10 ச.மீ. அதன் பாகம் | 50.00 | ஒரு முறை | 10 ச.மீ. அதன் பாகம் | 50.00 |
| | | 21. ஒரு குடியிருப்புக்கு மேல் கட்டப்படும் கட்டடிங்களுக்கு கூடுதலாக கட்டப்படும் ஒவ்வொரு சமையலறைக்கும் ரூ.500 /- என்ற விகிதத்தில் சேவை கட்டணம் வசூலிக்க வேண்டும். | | | | | |
| | | 22. சாலை அபிவிருத்தி கட்டணம் நகராட்சி பொறியாளரால் வழங்கப்படும் மதிப்பீட்டின் அடிப்படையில் வசூலிக்கப்படவேண்டும். | | | | | |
| 5 | | **கட்டிட உரிமம் புதுப்பித்தல் கட்டணம்** | | | | | |
| | 1. | அனுமதி காலம் முடியும் முன்பாக 3 ஆண்டுகளுக்கு கால நீடிப்பு அனுமதி கோரும் மனுவிற்கு தற்போது வசூலிக்கப்படும் கட்டணங்களின்படி, கட்டணங்கள் முழுவதும் செலுத்திய பின்னர் ஒருமுறை மட்டுமே கால நீடிப்பு அனுமதி வழங்கப்படும். | | | | | |
| 6 | | **ஆய்வுக் கட்டணம் (தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி எண்.7** | | | | | |
| | 1. | கட்டிட வரைப்படம் சமர்பிக்கும்போது | சதுர மீட்டருக்கு | ரூ.2.00 | | | |
| | 2. | முதல் திருத்திய கட்டிட வரைப்படம் சமர்பிக்கும்போது | சதுர மீட்டருக்கு | ரூ.1.00 | | | |
| | 3. | இரண்டாம் திருத்திய கட்டிட வரைப்படம் சமர்பிக்கும்போது | சதுர மீட்டருக்கு | ரூ.0.40 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 4. | மூன்றாம் திருத்திய கட்டிட வரைப்படம் சமர்பிக்கும்போது | சதுர மீட்டருக்கு | ரூ.0.20 |
| | 5. | அடுத்தடுத்து சமர்பிக்கும் திருத்திய கட்டிட வரைப்படங்களுக்கு | சதுர மீட்டருக்கு | – |

<u>அலுவலக குறிப்பு :</u>

1. திருத்திய கட்டணங்களை 01.04.2019 முதல் வசூல் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 293/2019/எப்1)

<u>பொருள் எண்.8</u>

அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் .04.02.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி III பரிவு 1 (a) நாள் 04.02.2019 ன்படி தமிழ்நாட்டின் உள்ள அனைத்து உள்ளாட்சிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்–2019 ல் ஆணை வெளியிடப்பட்டதின் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159/2018/டிபி3 நாள்05.03.2019ல் உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து “தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்–2019” மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

(ந.க.எண். 293/2019/எப்1)

<u>பொருள் எண்.9</u>

2019ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாடாளுமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் காஞ்சிபுரம் அவர்களால், அவ்வப்போது தேர்தல் சம்மந்தமாக நடத்தப்படும் ஆய்வு கூட்டங்களில் தெரிவிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி அதற்கான தோராய செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.10</u>

அனகாபுத்தூர் நகராட்சிக்குட்பபட்ட வார்டு எண். 5ல் பாலாஜி நகர் விரிவு, திரு.கே.தியாகராஜன் என்ற பெயரில் 14.11.2017 அன்று காலிமனை வரி விதிக்கப்பட்டு கணக்கீட்டு தாள் எடுக்கும்போது வரி விதிப்பு எண் வரவில்லை. இதனை தொடர்ந்து மேல்நடவடிக்கைக்கு தொழில் நுட்ப பிரிவு, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை – 05 அவர்களுக்கு 28.11.2017 மற்றும் 08.12.2017 ஆகிய தேதிகளில் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. ஆனால் மேற்படி பணி முடிக்கப்படவில்லை. எனவே மேற்படி மனுதாரருக்கு 14.12.2017ம் தேதியன்று காலிமனை வரி விதிக்கப்பட்டு வரி விதிப்பு எண்.017/005/01718 நடைமுறையில் இருந்து வருகிறது.

2018–19ம் நிதியாண்டில் கேட்பு நிர்ணயிக்கப்பட்ட போது மேற்படி வரி விதிப்பு எண் வரப்பெறாதற்கு கேட்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே 2018–19ம் நிதியாண்டில் கேட்பு எழுப்பப்பட்ட காலிமனை வரி விதிப்பு எண்.017/005/01774–ஐ கணிணி கேட்பில் இருந்து நீக்கம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மேற்குறிப்பிட்ட காலிமனை வரி விதிப்பு எண்.017/005/01774–ஐ கணிணி கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.11**

அனகாபுத்தூர் நகராட்சி கோடை காலத்தினை எதிர் நோக்கி குடிநீர் தட்டுப்பாடுன்றி வழங்குவதற்கு அலுவலக வளாகத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி (வார்டு எண்.1 முதல் 9 வரை) ரூ.9.80/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள உரிய வழிமுறைகளை பின்பற்றி ஒப்பந்ததாரர் தேர்வு செய்து 11.02.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் அனகாபுத்தூர் நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி பணிகள் (IUDM) திட்டத்தின் மூலம் ரூ.6.40 கோடியில் பம்மல் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சிகளுக்கு அருகில் உள்ள செங்கழிநீர் மலை பள்ளத்தில் இருந்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து முறையே 1.50 MLD பம்மல் நகராசிக்கு மற்றும் 1.00 MLD அனகாபுத்தூர் நகராட்சிக்கும் குடிநீர் வழங்க நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு மேற்கண்ட பணி பம்மல் நகராட்சி மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி மார்ச் 31க்குள் முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என பம்மல் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களால் உரிய அறிவுரை வழங்கப்பட்டது. ஆனால் தற்போது மேற்கண்ட பணி மிக காலதாமதமாக நடைபெற்றுவதால் மக்கள் பயன்பாட்டிற்கு குறிப்பிட்ட தேதியில் பயன்பாட்டிற்கு கொண்டு வர இயலாத நிலை உள்ளது. எனவே எதிர் வரும் கோடைகாலத்தினை சமாளிக்கும் பொருட்டு ஏற்கனவே உரிய வழிமுறைகளை பின்பற்றி பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்ததாரரின் மூலமாக அதே ஒப்பந்த விலையிலேயே கூடுதலாக குடிநீர் வழங்க ரூ.9.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும், செலவின தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.தற்போது பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட உள்ளதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாததினால், எதிர் வரும் காலம் கோடை காலம் என்பதால் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே வழங்கி வரும் ஒப்பந்த விலையில் பணி

மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.12</u>

அனகாபுத்தூர் நகராட்சி கோடை காலத்தினை எதிர் நோக்கி குடிநீர் தட்டுப்பாடுன்றி வழங்குவதற்கு காமராஜபுரத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி (வார்டு எண்.10 முதல் 18 வரை) ரூ.9.80/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள உரிய வழிமுறைகளை பின்பற்றி ஒப்பந்ததாரர் தேர்வு செய்து 11.02.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் அனகாபுத்தூர் நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி பணிகள் (IUDM) திட்டத்தின் மூலம் ரூ.6.40 கோடியில் பம்மல் மற்றும் அனகாபுத்தூர் நகராட்சிகளுக்கு அருகில் உள்ள செங்கழிநீர் மலை பள்ளத்தில் இருந்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து முறையே 1.50 MLD பம்மல் நகராசிக்கு மற்றும் 1.00 MLD அனகாபுத்தூர் நகராட்சிக்கும் குடிநீர் வழங்க நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு மேற்கண்ட பணி பம்மல் நகராட்சி மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி மார்ச் 31க்குள் முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என பம்மல் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களால் உரிய அறிவுரை வழங்கப்பட்டது. ஆனால் தற்போது மேற்கண்ட பணி மிக காலதாமதமாக நடைபெற்றுவதால் மக்கள் பயன்பாட்டிற்கு குறிப்பிட்ட தேதியில் பயன்பாட்டிற்கு கொண்டு வர இயலாத நிலை உள்ளது. எனவே எதிர் வரும் கோடைகாலத்தினை சமாளிக்கும் பொருட்டு ஏற்கனவே உரிய வழிமுறைகளை பின்பற்றி பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்படு வரும் ஒப்பந்ததாரரின் மூலமாக அதே ஒப்பந்த விலையிலேயே கூடுதலாக குடிநீர் வழங்க ரூ.9.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும், செலவின தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.தற்போது பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட உள்ளதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாததினால், எதிர் வரும் காலம் கோடை காலம் என்பதால் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே வழங்கி வரும் ஒப்பந்த விலையில் பணி மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.13</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு பணி செய்ய ஒரே ஒரு மின் பணியாளர் மட்டும் இருக்கும் காரணத்தால், தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியர் மூலம் (இயக்குதலும், பராமரித்தலும்) மேற்கொள்ள தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் கடிதம் ந.க.எண்.13899/2016/டிஓ1 நாள்.24.03.2017ன்படி ஒரு வருட காலத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் மேற்படி பணிக்கு 09.05.2017 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த மெசஸ்.லட்சுமி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு நகர மன்ற தீர்மான எண்.117 நாள்.31.05.2017ல் அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் 01.06.2017 அன்று ஒரு வருட காலத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி ஒப்பந்த காலம் 31.05.2018ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால், மீண்டும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டதன் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.13899/2016/டிஓ1 நாள்.28.05.2018ன் படி மேலும் ஒரு வருட காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேலும் ஒரு வருட காலத்திற்கு 01.06.2018 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 31.05.2019ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால், மீண்டும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:</u> மன்றம் அனுமதியளிக்கலாம்.
2.தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமலில் வர இருப்பதாலும், தொடர்ந்து மே மாதம் வரை நடைமுறையில் இருக்க வழிவகை உள்ளதாலும், புதிய பிரேரனை மற்றும் நீட்டிப்பு அனுமதி பெற காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் புதிய அனுமதி பெறும் வரை ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரருக்கு அதே விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளவும் அதற்கான தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.14</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்பு வழங்க குடிநீர் இணைப்பு வைப்பு தொகை, மேற்பார்வை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–05 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.748/2008/கு.வ2 நாள்.21.09.2009–ல் வ.எண்.2(ஈ) நகர்பற உள்ளாட்சி அமைப்புகள் கண்டிப்பாக பின்பற்ற அறிவுறுத்தப்பட்டு, அதனடிப்படையில் மேற்படி கட்டணம் மதிப்பிடப்பட்டு மன்ற அனுமதி பெறப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய மேற்படி சாலை துண்டிப்பு கட்டணத்தை முந்தைய ஆண்டின் தொகையை விட 5 % சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் (ஏப்ரல் 1ம் தேதி முதல்) என அறிவுரை வழங்கப்பட்டுள்ளதால் 2019–20ம் நிதியாண்டிற்கு மேற்படி குழாய் இணைப்பு வழங்கப்படும் வீட்டு உரிமையாளர்களிடமிருந்து உயர்த்தப்பட்ட கட்டணம் வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வருடம் | தார் சாலை | | சிமெண்ட் சாலை | | WBM சாலை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 0 – 30 மீ ரூ. | 30 – 90 மீ ரூ. | 0 – 30 மீ ரூ. | 30 – 90 மீ ரூ. | 0 – 30 மீ ரூ. | 30 – 90 மீ ரூ. |
| 1 | 2018–19 | 2,250/– | 2,850/– | 2,600/– | 3,200/– | 1,050/– | 1,650/– |
| 2 | 2019–20 | 2,363/– | 2,993/– | 2,730/– | 3,360/– | 1,103/– | 1,733/– |

<u>அலுவலககுறிப்பு:</u> மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>பொருள் எண்.15</u>

அளகாபுத்தூர் றகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் கைளாளுதல் விதிகள் 2016ன் ஆண்டு விதிகளின்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.19396/2017/பி3 நாள் 25.1.2019 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.2288/பி3/2019 நாள் 25.2.2019 அவர்களின் அறிவுரையின்படி இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் குறித்த கொள்கை குறிப்பு மற்றும் செயல் திட்ட அறிக்கை (SWM Policy and Strategy for Anakaputhur Municipality) தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு :</u> மன்றம் அனுமதியளிக்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி.